


தலைவர் தாமஸ் எஸ். மான்சன்

# என்னிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள்

பிற்காலப் பரிசுத்தவான்களின் இயேசு கிறிஸ்து சபையில், நாம் அனைவரும் ஆசிரியர்கள், மற்றும் நாம் அனைவரும் மாணவர்கள். அனைவருக்கும் இந்த மென்மையான அழைப்பு கர்த்தரிடமிருந்து வருகிறது: "என்னிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள்... அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்."[1]

கற்பிக்கவும், கற்கவும் தங்கள் முயற்சிகள் பற்றி சிந்திக்கவும், அப்படிச் செய்வதில் நமது வழிகாட்டியாக இரட்சகரைப் பார்க்கவும் நான் பிற்காலப் பரிசுத்தவான்களை அழைக்கிறேன். அவர் "தேவனிடமிருந்து வந்த போதகர்"[2] ஒரு ஆசிரியர் என்பதைவிட உயர்வானவர் என நாம் அறிவோம். நமது முழு இருதயங்களோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும், முழு மனதோடும் நமது தேவனாகிய கர்த்தரை நேசிக்க கற்பித்த அவர், மிகச் சிறந்த ஆசிரியர் மற்றும் பரிபூரண ஜீவியத்துக்கான நமது உதாரணம்.

"என்னைப் பின்பற்றி வா"[3] "நான் உங்களுக்கு உதாரணத்தை ஏற்படுத்தியிருக்கிறேன்,"[4] என அறிவித்தவர் அவரே.

## நீங்கள் மனந்திரும்பாவிட்டால்

மத்தேயுவில் பதிவு செய்யப்பட்டிருக்கிறபடி, இயேசு ஒரு எளிதான ஆனால் ஆழமான சத்தியத்தைப் போதித்தார். அவரும் அவரது சீஷர்களும் மறுரூபமலையில் இருந்து இறங்கிய பின்பு, அவர்கள் கலிலேயாவைத்தாண்டி, கப்பர்நகூமுக்குச் சென்றனர். அங்கு சீஷர்கள் அவரிடம் வந்து கேட்டனர்:

பரலோக இராஜ்யத்தில் எவன் பெரியவனாயிருப்பான்?

"இயேசு ஒரு பிள்ளையைத் தம்மிடத்தில் அழைத்து, அதை அவர்கள் நடுவிலே நிறுத்தி,

"நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போலாகாவிட்டால், பரலோக இராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்."[5]

சபையைப் பொருத்த வரையில் வீட்டிலானாலும், வகுப்பிலானாலும், ஊழியக்களத்திலானாலும், சுவிசேஷம் கற்பித்தலின் நோக்கம், தேவனின் பிள்ளைகளின் மனங்களில் தகவல்களைக் கொட்டுவது அல்ல. பெற்றோர், ஆசிரியர் அல்லது ஊழியக்காரர் எவ்வளவு தெரிந்திருக்கிறார் எனக் காட்ட அல்ல. இரட்சகர் மற்றும் அவரது சபை பற்றிய அறிவை அதிகரிப்பதற்காகவும் மட்டுமல்ல.

கற்பிப்பதன் அடிப்படை நோக்கம், பரலோக பிதாவின் குமாரர்களும் குமாரத்திகளும் அவரது சமூகத்துக்குத் திரும்பி, அவருடன் நித்திய ஜீவனை அனுபவிப்பதற்கு உதவவுமே ஆகும். இதைச் செய்ய சுவிசேஷப் போதனை சீஷத்துவத்தின் அன்றாடப் பாதையிலும் பரிசுத்த உடன்படிக்கைகளிலும், அவர்களை ஊக்குவிக்க வேண்டும். நோக்கமாவது, சுவிசேஷக் கொள்கைகளின்படி வாழ்வதுபற்றி சிந்திக்கவும், உணரவும், பின்பு ஏதாவது செய்யவும் தனிநபர்களை ஊக்குவிக்கவுமே. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் விசுவாசத்தை விருத்

திசெய்வதும், அவரது சுவிசேஷத்துக்கு மனமாறுவதுமே நோக்கமாகும்.

ஆசீர்வதித்து, மனமாற்றி, இரட்சிக்கிற கற்பித்தல், இரட்சகரின் உதாரணத்தை பின்பற்றும் கற்பித்தல். இரட்சகரின் உதாரணத்தைப் பின்பற்றும் ஆசிரியர்கள் தாங்கள் கற்பிப்பவர்களை நேசித்து சேவை செய்கிறார்கள். அவர்கள் தங்களைக் கேட்பவர்களை தெய்வீக சத்தியம் குறித்த நித்திய பாடங்களுடன் தூண்டுகின்றனர். பின்பற்றத் தகுதியுடைய வாழ்க்கை வாழ்கிறார்கள்.

### நேசித்து சேவை செய்யுங்கள்

இரட்சகரின் முழு ஊழியமும் அயலாரை நேசிப்பதை உதாரணமாக்கியது. உண்மையாகவே அவரது அன்பும் சேவையும் அடிக்கடி அவரது பாடமாக இருந்தது. அதைப் போல நான் அதிகம் நினைவில் வைத்திருக்கிற ஆசிரியர்கள், தங்கள் மாணவர்களை அறிந்து, நேசித்து, கவனித்தவர்கள். அவர்கள் காணாமல் போன ஆட்டைத் தேடினார்கள். அவர்கள் நான் எப்போதும் நினைவில் கொள்கிற வாழ்க்கைப் பாடங்களைக் கற்பித்தனர்.

அப்படிப்பட்ட ஒரு ஆசிரியை லூசி கெர்ட்ச். அவர் தன் ஒவ்வொரு மாணவரையும் அறிந்திருந்தார். ஒரு ஞாயிற்று கிழமை வராதவர்களைத் தவறாது அழைத்தார். அவர் எங்களைப் பற்றி அக்கறை கொண்டார் என நாங்கள் அறிவோம். அவரையும் அவர் எங்களுக்குக் கற்பித்த பாடங்களையும் எங்களில் ஒருவரும் மறக்கவில்லை.

அநேக ஆண்டுகளுக்குப் பின், லூசி அவரது வாழ்க்கையின் முடிவை நெருங்கும்போது, நான் அவரைச் சந்தித்தேன். அதிக காலத்துக்கு முன்பு அவர் எங்களுக்கு ஆசிரியராக இருந்த அந்த நாட்களைப்பற்றி நாங்கள் எண்ணிப்பார்த்தோம். நாங்கள் எங்கள் வகுப்பின் ஒவ்வொரு அங்கத்தினரைப் பற்றியும் அவர்கள் ஒவ்வொருவரும் இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் எனவும் பேசினோம். அவரது அன்பும் அக்கறையும் ஒரு வாழ்நாள் அளவும் நீண்டிருந்தது.

கோட்பாடும் உடன்படிக்கைகளுமில் காணப்படும் கர்த்தரின் அறிவுரையை நான் விரும்புகிறேன்.

“இராஜ்யத்தின் கோட்பாடுகளை ஒருவருக்கொருவர் கற்பிக்க வேண்டும் என நான் உங்களுக்கு ஒரு கட்டளையைக் கொடுக்கிறேன்.

“கருத்தாய்க் கற்பியுங்கள், என் கிருபை உங்களிடம் வரும்.”[6]

அவர் சோர்ந்து போகாமல் நேசித்ததால் லூசி கெர்ட்ச் கருத்தாய்ப் போதித்தார்.

### நம்பிக்கையையும் சத்தியத்தையும் அளியுங்கள்

அப்போஸ்தலனாகிய பவுல் ஆலோசனையளித்தான், “உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் உத்தரவு சொல்ல எப்போதும் தயாராயிருங்கள்.”[7]

ஒருவேளை ஒரு ஆசிரியர் கொடுக்கக்கூடிய மிகப் பெரும் நம்பிக்கை இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திலுள்ள சத்தியங்களில் காணப்படுகிற நம்பிக்கையே ஆகும்.

“மேலும் நீங்கள் எதை நம்பியிருக்கிறீர்கள்?” மார்மன் கேட்டான். “கிறிஸ்துவின் பாவநிவர்த்தி மற்றும் நித்திய ஜீவனுக்கேதுவாய் எழும்பும்படியான அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையின் மூலம் நீங்கள் நம்பிக்கையைப் பெற்றிருப்பீர்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.”[8]

ஆசிரியர்களே, உங்கள் குரல்களை உயர்த்தி தேவத்துவத்தின் உண்மையான தன்மையைக் குறித்து சாட்சி கொடுங்கள். மார்மன் புத்தகம் குறித்த சாட்சியை அறிவியுங்கள். இரட்சிப்பின் திட்டத்தில் அடங்கியுள்ள மகிமையான, அழகிய சத்தியங்களைத் தெரிவியுங்கள். மறுஸ்தாபிதம் செய்யப்பட்ட இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் சத்தியங்களைச் சுத்தமாகவும் எளிமையாகவும் கற்பிக்க சபையால் அங்கீகரிக்கப்பட்ட சாதனங்களை விசேஷமாக வேதங்களைப் பயன்படுத்துங்கள். “வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக் குறித்து சாட்சி கொடுப்பவைகளும் அவைகளே,”[9] என்ற இரட்சகரின் அறிவிப்பை நினைவு கொள்ளுங்கள்.

இந்த வாழ்க்கையில் எது உண்மையானது முக்கியமானது என தேவனின் பிள்ளைகள் புரிந்துகொள்ள உதவுங்கள். நித்திய ஜீவனின் பாதையில் அவர்களைப் பாதுகாப்பாக வைக்கிற பாதையைத் தெரிந்து கொள்ள பெலனை விருத்தி செய்ய அவர்களுக்கு உதவுங்கள்.

சத்தியத்தைக் கற்பியுங்கள், பரிசுத்த ஆவியானவர் உங்கள் முயற்சிகளில் பங்கு பெறுவார்.

### “என்னிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள்”

இயேசு கிறிஸ்து தன் பிதாவுக்குப் பரிபூரணமாகக் கீழ்ப்படிந்து பணிவாய் இருந்து, அவர் “ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்.”[10] அப்படிச் செய்யும் உறுதி நமக்கு இருக்கிறதா? இயேசு “கிருபைக்குக் கிருபை பெற்றதுபோல,”[11] சுவிசேஷத்தைக் கற்கும் நமது முயற்சிகளில் தேவனிடமிருந்து ஒளியையும் அறிவையும் நாம் பொறுமையாகவும் விடாமலும் நாட வேண்டும்.

கேட்டல் கற்றலின் முக்கிய அம்சம். கற்பிக்கப்பட ஆயத்தப்படும்போது, நாம் பரிசுத்த ஆவியிடமிருந்து உணர்த்துதலும் உறுதியையும் ஜெபத்துடன் நாடுகிறோம். நாம் தியானித்து, ஜெபித்து, சுவிசேஷ பாடங்களை பயன்படுத்தி நமக்காக பிதாவின் சித்தத்தை நாடுகிறோம்.[12]

கேட்கத் தக்க காதுகளும், காணத்தக்க கண்களும்,புரிந்துகொள்ள இருதயங்களும் தேவைப்படுகிற "அநேக காரியங்களை உவமைகளால் இயேசு கற்பித்தார்."[13]

"என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்," என்ற கர்த்தரின் அழைப்புக்கு நாம் பதிலளிக்கும்போது, நாம் அவரது தெய்வீக வல்லமையின் பங்காளிகளாகிறோம். ஆகவே நாம் கற்பிக்க அவர் விரும்புகிறபடியும் கற்பித்து நாம் கற்கும்படி அவர் விரும்புகிறபடியும் கற்று, நமது உதாரணரைப் பின்பற்றி நாம் கீழ்ப்படிதலின் ஆவியுடன் முன்னேறுவோமாக.

**குறிப்புகள்**

1. மத்தேயு 11:29.
2. யோவான் 3:2.
3. லூக்கா 18:22.
4. 3 நெப்பி 18:16.
5. மத்தேயு 18:1-3; முக்கியத்துவம் சேர்க்கப்பட்டுள்ளது.
6. கோட்பாடும் உடன்படிக்கைகளும் 88:77-78.
7. 1 பேதுரு 3:15.
8. மரோனி 7:41.
9. யோவான் 5:39.
10. லூக்கா 2:52.
11. கோட்பாடும் உடன்படிக்கைகளும் 93:12.
12. யோவான் 5:30 பார்க்கவும்.
13. மாற்கு 4:2.
14. யோவான் 14:26.

### இச்செய்தியிலிருந்து கற்பித்தல்

தலைவர் மான்சன் "கற்பிப்பதிலும் கற்பதிலும் நமது முயற்சிகளைப் பற்றி சிந்தித்து அப்படிச் செய்ய நமது வழிகாட்டியாக இரட்சகரை நோக்கிப் பார்க்க," நம்மை அழைக்கிறார். இயேசு கிறிஸ்து போதித்து கற்ற வழிகளில் உள்ளுணர்வுகளைக் காண நீங்கள் சந்திப்பவர்களுடன் வேதங்களை ஆராய்வதைக் கருத்தில் கொள்ளவும். மத்தேயு 11:29, யோவான் 5:30, மற்றும் மாற்கு 4:2 போன்ற தலைவர் மான்சன் குறிப்பிட்ட வசனங்கள் உள்ளிட்ட சிலவற்றுடன் நீங்கள் தொடங்கலாம். கிறிஸ்து பற்றி நீங்கள் கற்றவை உங்களுக்கு எப்படி "அவரது தெய்வீக வல்லமைகளில் பங்காளிகளாக" உதவ முடியும் என நீங்கள் கலந்துரையாடலாம்.

## பிள்ளைகள்

### இயேசு பற்றி கற்றல்

இயேசு உண்மையானவர், நம்மை நேசிக்கிறார் என அறிய நமக்கு உதவ பரிசுத்த ஆவியானவர் நமக்கு சமாதானமான உணர்வுகளைக் கொடுக்கிறார். இயேசு பற்றி நீங்கள் கற்றது பற்றி ஏதாவது எழுதவும் அல்லது வரையவும்.

© 2016 by Intellectual Reserve, Inc. எல்லா உரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. அ.ஐ.நாவில் அச்சிடப்பட்டது. ஆங்கில அங்கீகாரம்: 6/15. மொழிபெயர்ப்பு அங்கீகாரம்: 6/15. *First Presidency Message, March 2016.* மொழிபெயர்ப்பு Tamil 12863 418

# தேவனின் சாயலில் சிருஷ்டிக்கப்பட்டு

*இச்செய்தியை ஜெபத்துடன் படித்து எதைப் பகிர்ந்துகொள்வது என அறிய நாடவும். "குடும்பம்: உலகுக்கு ஒரு பிரகடனத்தைப்" புரிந்து கொள்வது, விசாரிப்புப் போதகம் மூலம் நீங்கள் கண்காணிப்பவர்கள், தேவனில் விசுவாசிப்பதை எவ்வாறு அதிகரித்து, ஆசீர்வதிக்கும்? அதிகத் தகவலுக்கு reliefsociety.lds.org பார்க்கவும்.*

**விசுவாசம், குடும்பம், ஒத்தாசை**

"பின்பு தேவன், நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக என்றார். ...

"தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்." (ஆதியாகமம் 1:26-27).

தேவனே நமது பரலோக பிதா, அவர் நம்மை அவரது சாயலில் சிருஷ்டித்தார். இச்சத்தியம் குறித்து தலைவர் தாமஸ் எஸ். மான்சன் சொன்னார்: " நமது ஜெபங்களைக் கேட்க நமது பிதாவாகிய தேவன் காதுகள் பெற்றிருக்கிறார். நமது செயல்களைப் பார்க்க அவருக்கு காதுகள் உண்டு. நம்மிடம் பேச அவருக்கு வாய் உண்டு. மனதுருக்கத்தையும் அன்பையும் காட்ட அவருக்கு இருதயம் உண்டு. அவர் உண்மையானவர். அவர் ஜீவிக்கிறார். அவரது சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட நாம் அவரது பிள்ளைகள். நாம் அவரைப்போலிருக்கிறோம், அவர் நம்மைப்போலிருக்கிறார்."[1]

முற்றிலும் முழுவதுமாக எல்லா ஜனத்தையும் பிற்காலப் பரிசுத்தவான்கள், தேவனின் பிள்ளைகளாகப் பார்க்கிறார்கள்; தோற்றத்திலும், தன்மையிலும், திறமையிலும் ஒவ்வொருவரும் தெய்வீகமானவர்கள் என அவர்கள் கருதுகிறார்கள்."[2] ஒவ்வொருவரும் "பரலோகப் பெற்றோரின் ஆவிக்குமாரர் மற்றும் ஆவிக்குமாரத்திகள்."[3]

"அவர் பங்கேற்கிற மேன்மையான தன்மையை அவரது பிள்ளைகளும் பெறுவதைத் தேவன் விரும்புகிறார் என (தீர்க்கதரிசி) ஜோசப் ஸ்மித் அறிந்தார்."[4] தேவன் சொன்னது போல, "மனுஷனின் அழியாமையையும் நித்திய ஜீவனையும் கொண்டுவருவதே இதோ எனது பணியும் மகிமையுமாயிருக்கிறது." (1:39).

### கூடுதல் வசனங்கள்

*ஆதியாகமம் 1:26–27; 1கொரிந்தியர் 3:17; கோட்பாடும் உடன்படிக்கைகளும் 130:1.*

### வேதங்களிலிருந்து

தண்ணீர்களைக் கடந்து வாக்குத்தத்தத்தின் தேசத்துக்கு யாரேதியரைக் கொண்டுசெல்ல வடிவமைக்கப்பட்ட எட்டு கலங்களுக்கு ஒளி கொடுக்க ஒரு வழியை மார்மன் புத்தக யாரேதின் சகோதரன் தேடினான். அவன் "ஒரு பாறையிலிருந்து பதினாறு கற்களை உருக்கி எடுத்து," "இருளில் அவை பிரகாசிக்கும்படி" தன் விரல்களினால் தேவன் "இக்கற்களைத் தொடுமாறு" ஜெபித்தான். தேவன்"தன் கைகளை நீட்டி, கற்களை ஒவ்வொன்றாகத் தொட்டார்." யாரேதின் சகோதரனின் கண்களிலிருந்து திரை நீக்கப்பட்டது, "அவன் கர்த்தரின் விரலைப் பார்த்தான்; அது ஒரு மனுஷனின் விரலாயிருந்தது. ...

"கர்த்தர் அவனிடம் சொன்னார்: நான் பேசவிருக்கிற வார்த்தைகளை நம்புகிறாயா?

"அவன் பதிலளித்தான்: ஆம், கர்த்தாவே."

கர்த்தர் "(யாரேதின் சகோதரனுக்கு) தன்னைக் காண்பித்தார்," மேலும் சொன்னார், "நீ என் சாயலில் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறாய் எனப் பார்க்கிறாயா? ஆம், எல்லா மனுஷரும் ஆதியில் என் சொந்த சாயலில் சிருஷ்டிக்கப்பட்டார்கள்." (ஏத்தேர் 3:1–17.)

குறிப்புகள்

1. Thomas S. Monson, "I Know That My Redeemer Lives," in Conference Report, Apr. 1966, 63.
2. Gospel Topics, "Becoming Like Go,"; see also Moses 7:31–37.
3. "The Family: A Proclamation to the Worl," *Liahona,* Nov. 2010, 129.
4. Gospel Topics, "Becoming Like Go,"; see also Teachings of Presidents of the Church: Joseph Smith (2007), 221.

### *இதைக் கருத்தில் கொள்ளவும்*

**ஒவ்வொருவரும் தேவனின் சாயலில் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறார்கள் என அறிவது பிறருடன் நமது தொடர்புகளில் எப்படி நமக்கு உதவுகிறது?**

© *2016* by Intellectual Reserve, Inc. எல்லா உரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. அ.ஐ.நாவில் அச்சிடப்பட்டது. ஆங்கில அங்கீகாரம் : 6/15. மொழிபெயர்ப்பு அங்கீகாரம் : 6/15. *Visiting Teaching Message, March 2016.*மொழிபெயர்ப்பு Tamil *12863 418*